**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 21/2016**

DW1 – சுரேஷ் த/பெ சீத்தாராமன்
நாள்–05.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்துள்ளார். நானும் வாதியும் குடியிருந்து வரும் பகுதியானது மேலத்தெரு என்றால் சரிதான். மேலத்தெருவில் என்னுடைய வீடும் வாதியின் வீடும் மேற்கு பார்த்தவாறு உள்ளது என்றால் இல்லை கிழக்கு பார்த்தாவாறு உள்ளது. மேற்கு பார்த்தவாறுதான் வீடுகள் உள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வீடு மற்றும் மனைக்கு வடக்குபுறம் தான் வாதியின் வீடும் மனையும் உள்ளது என்றால் சரிதான்.

வாதிகளின் வீட்டின் வடக்குபுறம் செல்வராஜ் என்பவரின் வீடும், மனையும் உள்ளதா என்றால் விஜயலட்சும் க/பெ கண்ணப்பன் என்பவரின் வீடும், மனையும் உள்ளது. எனது வீட்டின் பின்புறம் ஜெயராமன் என்பவரின் கடையும், மனையும் உள்ளது என்றால் சரிதான். ஜெயராமன் என்பவரின் கடையும், மனையும் சீர்காழி-மயிலாடுதுறை பிரதான சாலையை ஒட்டியவாறு உள்ளது என்றால் சரிதான். வாதிகளுக்கு பிரதான சாலையை ஒட்டி மனை இல்லை என்றால் சரியல்ல. கொல்லைப்பகுதி இருக்கிறது. வாதிகளின் வீடு சுமார் 100 வருடம் பழைமை வாய்ந்த ஓட்டு வீடு என்றால் சரிதான்.

எங்கள் வீடானது ஏற்கனவே இருந்த பழைய ஓட்டு வீட்டை இடித்து விட்டுதான் புதியதாக RCC வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் ஏற்கனவே இருந்த ஓட்டு வீட்டை விட சிறியதாகத்தான் கட்டப்பட்டுள்ளது. வாதிகள் வீட்டு கொல்லைப்பகுதியில் பலவகை மரங்கள் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

நான் எந்த வருடம் RCC வீடு கட்டினேன் என்றால் 2019 ஆம் வருடம் கட்டினேன். நான் வீடு கட்டுவதற்கு முறைப்படி வரைபட அனுமதி கட்டிட அனுமதி பெற்றுதான் கட்டியுள்ளேன். எனது வீட்டின் வரைபட அனுமதியை நான் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2-ன் அசல் ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2-ல் சொத்தின் நீளம்,அகலம் குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1-ம் வாதியின் பெற்றோர்கள் தான் தங்கயாள்- அருணாச்சலம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சொத்து தங்கயாளுக்கு உரிமையாக இருந்து வாரிசு முறையில் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் கேள்விப்பட்டுள்ளேன்.

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நீலக்கலர் வர்ணம் உள்ள வீடு என்னுடையது ஆகும். அதன் பக்கத்தில் உள்ள வீடு கலியமூர்த்தி மற்றும் சின்னதுரையின் வீடு என்றால் சரிதான். அந்த **புகைப்படங்கள் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.(எண்ணிக்கை**-5) என் வீட்டை ஒட்டி 10 அடி நீளத்திற்கும் 6 அடி உயரத்திற்கும் ஒரு சுவர் உள்ளது என்றால் சரிதான். அது தான் எனது பழைய ஓட்டு வீட்டின் தாய் சுவர் என்றால் சரிதான். எனது பழைய ஓட்டு வீட்டின் தாய் சுவருக்கும், வாதிகளின் வீட்டின் சுவற்றிற்கும் இடையில் சுமார் 6 அடி அகல இடைவெளி உள்ளது என்றால் சரிதான். மேற்படி 6 அடி அகல இடைவெளி உள்ள இடத்தில் தான் நான் மண் எடுத்தேன் என்றால் அது என் இடம் என்பதால் நான் மண் எடுத்தேன்.

நான் மண் எடுத்ததற்கான பள்ளம் தற்போதும் உள்ளது என்றால் சரிதான். எனக்கும் வாதிகளுக்கும் அத்து சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு நில அளவையர் மூலம் அளவீடு செய்யப்பட்டதா என்றால் நான் எனது வீட்டை நில அளவையர் மூலம் அளந்துள்ளேன். நான் அளவீடு செய்ததற்கான அறிக்கை நில அளவையரிடமிருந்து பெற்றுள்ளேன் . அதை என்னால் தாக்கல் செய்ய இயலும் என்றால் சரிதான். எங்கள் பழைய ஓட்டு வீட்டின் தாய் சுவற்றில் தற்போது வாரி இல்லை என்றால் சரிதான் ஏற்கனவே இருந்தது. எனது ஓட்டு வீட்டின் தாய்

சுவற்றிற்கும், வாதிகள் வீட்டின் சுவற்றிற்கும் இடையே உள்ள 6 அடி சந்தானது வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் அத்துமீறி வாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் ஆக்கிரமிக்க முயற்சி செய்ததால் தான் வாதிகள் வழக்க தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

தங்கயாள் பெயரிலுள்ள கிரய ஆவணத்தில் கண்டுள்ள சொத்தில் நாங்கள் உரிமை கோரவில்லை என்றால் சரிதான் . நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி எங்கள் தரப்பில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 6 அடி அகல சந்து பகுதி பொது புழக்கம் என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2-ல் 6 அடி அகல சந்து பொது புழக்கம் என்பதற்கான வாசகம் கண்டுள்ளதா என்றால் தெரியாது. 6 அடி அகல சந்து பொது புழக்கம் என்றால் ஆவணங்களில் வாசகம் கண்டிருக்கும் என்றும் அவ்வாறு இல்லை என்பதால் தான் வாசகங்கள் இல்லை என்றால் சரியல்ல. 1-ம் வாதி வயதான ஓய்வுப்பெற்ற ஆசிரியர் என்பதாலும், அவருக்கு மகன்கள் இல்லை என்பதாலும், சந்து பகுதியை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.